**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 48/2024 P.W. 5/L.W. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சுதா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். அ.சா1 ஐ எனக்குத் தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 16.08.2022 ம் தேதி காலை 12,00 மணியளவில் அ.சா1 ன் வீட்டில் நான் வேலைச் செய்துக்கொண்டிருந்த போது அவர்கள் வீட்டில் பணம் மற்றும் நகை களவு போனது. அப்போது அ.சா1 விசாரணை செய்தபோது மெல்டா என்பவர் நகைகளை திருடியதை ஒப்புக்கொண்டார் என்றும் மேற்படி பணத்தை வனஜா, ஷாஜன் ஆகியோர்களிடம் கொடுத்ததாக கூறினார் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் உண்மை

நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 48/2024 P.W. 6/L.W. 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பிரேமா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய தந்தை. மெல்டா என்பவர் என் தந்தையின் வீட்டில் வேலைச் செய்து வந்தார். அவர் என்தந்தை வீட்டில் திருடியது சம்மந்தமாக அவரை எனது தந்தை விசாரணைச் செய்தபோது அவர் திருடியதை ஒப்புக்கொண்டார். அவர் 13 பவுன் தங்க நகை மற்றும் 9 இலட்சம் ரூபாயும் திருடியிருந்தார். அதன் பிறகு எனது தந்தை போலீசில் புகார் கொடுத்தார். திருடிய பணத்தை ஷாஜன் மற்றும் வனஜா ஆகியோருக்கு வட்டிக்கு கொடுத்திருப்பதாக மெல்டா ஒப்புக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

பட்டியல் சாட்சி 7 என் சகோதரி என்றால் சரிதான். நான் என் சகோதரி என் அண்ணி ஆகியோர்கள் என் அப்பா வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம் என்றால் சரிதான். வீட்டில் உள்ள அறைகளின் சாவி என்அப்பாவிடம் தான் இருக்கும். நாங்கள் அவ்வாறு வீட்டிற்கு செல்லும்போது எங்கள் அப்பா எப்போதாவது பணம் தருவார். 1000 ரூபாய் 500 ரூபாய் தருவார்.

2. நான் காவல்நிலையத்திற்கு 20.08.2022ம் தேதி காலை 10.00 மணிக்குச் சென்றேன். அப்போது நான், எங்க அப்பா, என் பையன் ஆகியோர்கள் சென்றோம். என் அப்பா அன்றையதினம் காலை 10.00 மணிக்கே புகார் கொடுத்துவிட்டார். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என் அப்பா வீட்டில் எந்த களவும் போகவில்லை என்றும், அவ்வாறு களவு போயிருந்தால் அன்றையதினமே புகார் கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 48/2024 P.W. 7/L.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. வெஸ்டா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.02.025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய தந்தை. மெல்டா என்பவர் எனது தந்தை வீட்டில் 2 வருடமாக வேலைச் செய்தார்.16.08.2022 ம் தேதி எனது தந்தை வீட்டில் பணம் மற்றும் நகை தொலைந்துவிட்டதாக கூறினார். பணம் ரூபாய் 9 இலட்சம் மற்றும் நகை 13 பவுன் தொலைந்துவிட்டதாக கூறினார். எனது தாயார் நகை தொலைந்து போய்விட்டதை கேள்விபட்டவுடன் உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. அவரை மருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்த்திருந்தோம். ஆகவே 20.08.2022 ம் தேதி தான் காவல்நிலையத்தில் எனது தந்தை புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**<u>குறுக்கு விசாரணை</u>** :

என் தந்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.